[1987 ஏப்ரல் 4

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(உ) ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் முடிவுறுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், ஜே. முகம்மது கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு சத்துணவு, சமூகநலன் மற்றும் கதர்த் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ஜே. முகம்மது கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "சிறப்புடன் நடைபெறும் மக்களுக்கு நலம் பயக்கும் திட்டமான ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் 1987-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதியுடன் முடிவடையும் என அறிவிக்கப்பட்டு உள்ளதால், அத்திட்டத்தால் பயன்பெறும் லட்சக்கணக்கான கிராமப்புற மக்களிடமும், அத்திட்டத்தில் பணியாற்றும் சுமார் 10,000 பணியாளர்களிடமும் தோன்றியுள்ள அச்ச உணர்வு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சத்துணவு, சமூகநலன் மற்றும் கதர்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

1980-ம் ஆண்டு பிப்ரவரி-மார்ச் திங்களில் உலக வங்கியின் உதவியோடு தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் ஒப்பந்தம் செய்யப்பட்டு, 12—5—1980-ம் நாளன்று, அமெரிக்க டாலர் 32 மில்லியனுக்கு ஓர் உடன்படிக்கை வகை செய்யப் பட்டது. மொத்த மதிப்பீட்டில் 50 விழுக்காடான ரூ. 27 கோடியை உலக வங்கி அளித்தது.

(2) ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணி திட்டங்களை திறமையாகவும், பரவலாகவும் மற்றும் பயனுள்ளதாகவும் செய்வதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். இது, ஊட்டச் சத்து குறைந்த மிகவும் நலிந்த பிரிவினரான 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகளுக்கு, முறையாகவும்

1987 ஏப்ரல் 4] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

மற்றும் தீவிரமாகவும் செயல்படுத்துவதின் மூலம் நிறைவேற்றப் படும் பிற வயதினரான கருவுற்ற தாய்மார்கள், மற்றும் பள்ளிக் குச் செல்லும் வயதொத்த சிறுவர்களுக்கு அளிக்கும் உயர்ந்த அளவு சத்துணவு பணியினால் இத்திட்டத்தின் சிறப்பையும், தரத்தையும் உயர்ந்த சத்துணவு சம்பந்தப்பட்ட பல்வேறு பணி களும் இத்திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(3) இத்திட்டம் ஒன்றிய அடிப்படையில் 5 வருடத்தில் மதுரை, அண்ணா, இராமநாதபுரம், காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, வடாற்காடு மற்றும் செங்கல்பட்டு ஆகிய 9 மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. ஒப்பந்தப்படி இத்திட்டம் 1980-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் தொடங்கப்பட்டு 30—6—1986 அன்று முடிவடைவதாக இருந்தது.

(4) ஐ.டி.ஏ. கடன் உதவி அளித்து உதவித்தொகையில் 30—6—1986 முடிய சுமார் 8 கோடி ரூபாய் மீதப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறு மீதமுள்ள 8 கோடி ரூபாயை, முடிவுறாமல் இருக்கும் திட்டப் பணிகளுக்கும் மேலும் சில புதிய பணிகளுக்கும் பயன்படுத்தலாம் என்று 13—9—1985-ல் புது டில்லியில் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி திட்டங்களின் சில பகுதிகளை முடிக்க மேலும் அதிகமான காலம் தேவைப்படுவதால் மாநில அரசு திட்டக்காலத்தை நீட்டிக்க வேண்டும் என்று கோரி உலக வங்கிக்கு மத்திய அரசு மூலம் தெரிவிக்கப்பட்டது. உலக வங்கியின் ஒப்புதலை எதிர்நோக்கி இத்திட்டத்தையும் அதில் பணியாற்றும் அனைத்து பணியாளர் களையும் 31—3—1987 வரை நீட்டித்து அரசு ஆணை பிறப்பித்தது.

(5) உலக வங்கி அண்மையில் அனுப்பியுள்ள செய்தியில் 31—3—1987-ல் முடிய இருந்த இத்திட்டத்தின் காலத்தை 31—3—1988 வரை நீட்டிக்க இசைவு தெரிவித்துள்ளது. இது குறித்த ஆணை விரைவில் வெளியிடப்பட உள்ளது. ஆணை வெளியிடப்படும்போது இத்திட்டத்தில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களையும் 31—3—1988 வரை நீட்டித்து ஆணை வெளி யிடப்படும்.

(6) மேலும், இத்திட்டம் 31—3—1988-ல் முடிவடையும் தருவாயில், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தையும், முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவு திட்டத்தையும் இணைத்து, இம்மாநிலத்தில் "ஒருங்கிணைந்த குழந்தைகள்

நலம் மற்றும் சத்துணவு திட்டம்" என்ற பெயரில், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் இரண்டாவது பகுதியாக செயல்படுத்துவதற்கு உலக வங்கியிடம் இருந்து உதவி பெறுவது சம்பந்தமான கருத்துரு ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி கருத்துரு தயாரிக்கப்பட்டபின், அக்கருத்துரு உலக வங்கிக்கு அனுப்புவதற்காக மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே உலக வங்கி 27 கோடி ரூபாய் தந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மீதத் தொகை எந்த வகையிலே தரப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்றும், ஏனைய மாவட்டங்களுக்கு இந்த திட்டம் எப்போது மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, தற்போது இந்தத் திட்டம் 31—3—1988 வரை நீட்டிக்க இசைவு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து ஆணை விரைவில் வெளியிட உள்ளது. அதற்குப் பிறகு ஒருங்கிணைந்த குழந்தைகள் நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் செயல்படும்.

திரு. ஜே. முகம்மது கனி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, 31—3—1988-க்குப் பின்னாலே அந்தத் திட்டம் அதே பணியாளர்களை வைத்து செயற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதே பணியாளர்களைக் கொண்டுதான் அந்தப் பணி செயலாற்றப்படும்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

THIRU T. VENKATA REDDI: Mr. Deputy Speaker, Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee:

(1) Fifty-sixth Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to Commercial Taxes and Religious Endowments Department in the Report of the Comptroller and Auditor-General of India for the year 1982-83 (Revenue Receipts);